முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1015

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
மாறுதலை உலகினில் செய்வேன் என்று
மாதவம் புரிகின்ற குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 26 நாள், 10.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
ஊழ்வென்று உலகோரை மீட்க
உயர்ஞானம் அருளும் அரங்கனே கலியுகத்தின் சிறந்த ஞானி
3. ஞானியரின் உண்மை வழிகளை
ஞாலமதில் உலகோர் பின்பற்றி வர
இனிமேலாய் அவரவர் வாழ்விலும்
ஏற்றமும் மாற்றமும் குறையில்லாத பெருவாழ்வும்
4. வாழ்வினில் ஞானசித்தியும் யோகமும்
வாழுங்காலமே ஆறுமுகன் என் காட்சியும் அருளும் கிட்ட நேரும்
நேர்மைகொண்டு அரங்கன் வழி வந்தால்
நிலவுலகத்தில் இந்த அற்புதத்தை காணக்கூடும்
5. ஞாலமதில் அரங்கனே ஆற்றல்மிக்க ஞானி
நம்பிவர உலகினில் நவகோடி ஞானியர்கள்
அரங்கன் அருளால் உருவாக்கப்பட்டு
இந்த உலகமே ஞான ஆட்சிக்காலமாக மாறும்
6. மாறுதலை செய்யும் முகாந்திரமாக மண்ணுலகில் அவதரித்த அரங்கனே
ஆறுமுகப் பெருமான் எந்தன் அவதாரத்தின் மகா சூட்சுமமாக
பெருமைகொண்டு உலகோர் வரவேற்று அரங்கன் வழி வர
பேருலகில் அற்புதங்கள் தானாய் நடக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–